11.03.2025

OS No: 548/2019

வா.சா.1 திரு. நாச்சியப்பன், த/பெ. சண்முகம்

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பிரதிவாதி என்ன தேவைக்காக என்னிடம் கடன் பெற்றார் என்ற விபரம் எனது பிராதிலோ, சாட்சிய நிருபணவாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. பிரதிவாதிக்கு ரூ.2லட்சத்தை எந்த இடத்தில் வைத்து நான் கொடுத்தேன் என்று பிராதிலோ, சாட்சிய நிருபணவாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. பிரதிவாதிக்கு ரூ.2லட்சத்தை எந்த தேதியில், மாதத்தில், வருடத்தில் நான் கொடுத்தேன் என்று பிராதிலோ, சாட்சிய நிருபணவாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பிரதிவாதிக்கு தாவா சொத்தை பொறுத்து கிரையம் செய்து கொடுப்பாரா இல்லையா என்பது குறித்து விசாரணை செய்துதான் பணம் கொடுத்தேனா என்றால் விசாரணை செய்து தான் கொடுத்தேன். 10.08.2015 தாவா கிரைய ஒப்பந்த ஆவணம் எங்கு வைத்து எழுதி பதிவு செய்யப்பட்டது என்றால் திருப்பத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து பதிவு செய்யப்பட்டது. கிரைய ஒப்பந்த ஆவணத்தில் பிரதிவாதி எந்த மொழியில் கையெழுத்து செய்தார் என்றால் ஆங்கில மொழியில் கையெழுத்து செய்தார். தாவா கிரைய ஒப்பந்த ஆவணத்தில் யார், யார் சாட்சி கையெழுத்து செய்துள்ளது என்றால் மணியரசன், தென்னரசு ஆகியோர் சாட்சி கையெழுத்து செய்துள்ளனர். மணியரசனும், தென்னரசும் எந்த மொழியில் கையெழுத்து செய்தார்கள் என்றால் ஆங்கிலத்தில் செய்தார்கள். தாவா கிரைய ஒப்பந்த ஆவணத்தில் கண்ட ஒரு வருட தவணை முடிந்தவுடன் உடனடியாக ஏன் வழக்குப்போடவில்லை என்றால் பேச்சுவார்த்தை நடத்தினோம் அதனால் வழக்கு உடனடியாக தாக்கல் செய்யவில்லை. யார் மூலமாக பேச்சுவார்த்தை நடத்தினோம் என்றால் கண்டாரமாணிக்க கிராம தலைவர் மூலமாக பேச்சுவார்த்தை நடத்தினோம். மேற்படி கிராம தலைவரை எங்களது தரப்பில் சாட்சியாக

விசாரிக்க உள்ளோமா என்றால் அவர் இறந்துவிட்டார். பிரதிவாதிக்கு ரூ.2லட்சமும், பிரதிவாதியின் கணவருக்கு ரூ.5லட்சமும் கொடுத்து இருவர் மீதும் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான், மேற்சொன்ன தொகை ரூ.7லட்சம் எனக்கு எந்த வகையில் கிடைத்தது என்றால் வியாபாரத்தின் மூலம் கிடைத்தது. 2015ம் வருடம் பிரதிவாதி மற்றும் பிரதிவாதியின் கணவரிடம் செய்து கொண்டதுபோல் வெவ்வேறு நபர்களிடமும் கிரைய ஒப்பந்தம் போட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் 2015ம் வருடம் வருமான வரி செலுத்தியுள்ளேனா என்றால் செலுத்தியுள்ளேன். மேற்கண்ட காலத்திற்கான வருமான வரி விபரங்களை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். தாவா சொத்து பிரதிவாதிக்கு எப்படி பாத்தியம் என்றால் கிரைய பத்திரத்தின் அடிப்படையில் பாத்தியம். தாவா வழக்கு கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்துவதற்கு முன்னர் வில்லங்கச் சான்று பார்த்தேனா என்றால் பார்த்தேன், மேற்படி வில்லங்கச் சான்றை தாவா வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். தாவா சொத்திற்கு யார் பெயரில் பட்டா இருந்தது என்பது குறித்து தெரிந்து கிரைய ஒப்பந்த பத்திரம் செய்தேனா என்றால் மேற்படி சொத்திற்கு பட்டா கிடையாது. தாவா கிரைய ஒப்பந்த பத்திரத்தில் செய்யப்பட்ட மேற்குறிப்பான வா.சா.ஆ.4 எந்த தேதியில் செய்யப்பட்டது என்றால் 03.07.2019ல் பிரதிவாதி ரூ.10,000 பெற்றுக்கொண்டு செய்யப்பட்டது. மேற்படி மேற்குறிப்பிற்கு யார் சாட்சிகள் என்றால் கண்ணன் மற்றும் ராஜ்குமார் ஆகியோர் சாட்சிகள். மேற்படி சாட்சிகளை சமூகம் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். தாவா கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்தில் பிரதிவாதியின் குடும்ப வசதி நிலை குறித்து தெரிந்து கொண்டேனா என்றால் நடுத்தர வசதி கொண்ட குடும்பமாகும். பிரதிவாதிக்கு நான் கடன் கொடுத்தது பிரதிவாதி தாவா கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்தது பிரதிவாதியின் குடும்பத்தாருக்கு தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதிக்கு எந்த தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் 2019ம் வருடம் 6ம்

மாதம் அனுப்பினேன் தேதி ஞாபகமில்லை. எத்தனை வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் ஞாபகமில்லை. தாவா வழக்கிற்கான விபரம் வழக்கறிஞருக்கு யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். தாவா வழக்கின் எதிர்வழக்குரையை படித்துப்பார்த்துள்ளேனா என்றால் படித்துப்பார்த்துள்ளேன். தாவா வழக்கு பிரதிவாதி தாவா கிரைய ஒப்பந்த பத்திரம் குறித்தும், அதில் உள்ள கையெழுத்து குறித்தும் ஒப்புக்கொண்டுள்ளாரா என்றால் மறுத்துள்ளார். தாவா கிரைய ஒப்பந்த பத்திரத்திலுள்ள பிரதிவாதியின் கையெழுத்தை பிரதிவாதியினுடையது என நிரூபித்திட ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. தாவா கிரைய ஒப்பந்த பத்திரத்தை பிரதிவாதி ஏற்படுத்திடவில்லை என்றும் அந்த ஆவணம் என்னால் உருவாக்கப்பட்டு தாவா வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா கிரைய ஒப்பந்த பத்திரத்திற்கு முன்னால் பிரதிவாதியின் வீட்டிற்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். பிரதிவாதியின் வீட்டிற்கு சென்ற போது தாவா சொத்து சம்மந்தப்பட்ட ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.7 ஆவணத்தை நான் பிரதிவாதியின் வீட்டிற்கு சென்றபோது பிரதிவாதிக்கு தெரியாமல் எடுத்து வந்து தாவா வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரத்தில் கண்ட மேற்குறிப்பு எனது செல்வாக்கை பயன்படுத்தி நானே ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் குடும்பத்தலைவர் யார் என்றால் மணியரசன். பிரதிவாதிக்கு பணம் கொடுப்பதற்கு முன்னும், தாவா கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு முன்பும் பிரதிவாதியின் கணவர் மணியரசனிடம் விபரம் சொல்லி அவரது சம்மதம் பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன் சாட்சி கையெழுத்து அவரே செய்துள்ளார். தாவா கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதி கொடுத்தது பிரதிவாதிக்கு தெரியாது என்றும், அவர் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 2015ம் வருடத்தில் நிறைய நபர்களிடம் சொத்துக்களை மோசடியாக நான் எழுதி வாங்கியதாக சொல்லி திருப்பத்தூர் காவல் நிலையத்தில் என் மீது குற்றவழக்குகள்

உள்ளது என்றால் அப்படி எதுவும் இல்லை. தாவா கிரைய ஒப்பந்த பத்திரத்தில் உள்ள கையெழுத்து பிரதிவாதியினுடையது அல்ல என்றும், அதிலுள்ள புகைப்படம் பிரதிவாதியினுடையது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் குடும்பம் நன்கு வசதியான குடும்பம் என்றும், என்னிடம் கடன் தொகை பெறவேண்டிய அவசியம் அவருக்கு இல்லை என்றும், தாவா வழக்கில் பிரதிவாதிக்கு எதிராக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.03.11 14:45:34 +0530